


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.2.2026) தலைமைச் செயலகத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில், தமிழ்த் திரைப்பட உலகத்தின் பழம்பெரும் பின்னணி பாடகர் திருச்சி லோகநாதன் அவர்கள் வசித்து வந்த மந்தைவெளிப்பாக்கம் நார்ட்டன் 3வது தெருவிற்கு "திருச்சி லோகநாதன் தெரு" என்று புதிய பெயர் சூட்டப்பட்ட சாலையின் பெயர் பலகையினை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர் கே.என்.நேரு, மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, துணை மேயர் மு.மகேஷ் குமார், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் திருச்சி லோகநாதன் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.2.2026) தலைமைச் செயலகத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில், தமிழ்ப்பாடகர் சங்கீத சேவகர் சீர்காழி கோவிந்தராஜன் அவர்கள் வசித்து வந்த மந்தைவெளிப்பாக்கம் கிழக்கு வட்டச் சாலைக்கு "சீர்காழி கோவிந்தராஜன் சாலை" என்று புதிய பெயர் சூட்டப்பட்ட சாலையின் பெயர் பலகையினை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். நிகழ்ச்சியில், அமைச்சர் கே.என்.நேரு, மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, துணை மேயர் மு.மகேஷ் குமார், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் சீர்காழி கோவிந்தராஜன் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

## பழம்பெரும் பின்னணி பாடகர்கள் திருச்சி லோகநாதன், சீர்காழி கோவிந்தராஜன்,

# மெல்லிசை மன்னர் எம்.எஸ்.விஸ்வநாதன் பெயர்களில் சாலைகள்!

## பெயர்ப் பலகைகளை காணொலிக் காட்சி வாயிலாக – முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, பிப். 19 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.2.2026) தலைமைச் செயலகத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில், தமிழ்த் திரைப்பட உலகத்தின் பழம்பெரும் பின்னணி பாடகர் திருச்சி லோகநாதன் அவர்கள் வசித்து வந்த மந்தைவெளிப்பாக்கம் நார்ட்டன் 3வது தெருவிற்கு "திருச்சி லோகநாதன் தெரு" என்றும் தமிழ்ப்பாடகர் சங்கீத சேவகர் சீர்காழி கோவிந்தராஜன் அவர்கள் வசித்து வந்த மந்தைவெளிப்பாக்கம் கிழக்கு வட்டச் சாலைக்கு "சீர்காழி கோவிந்தராஜன் சாலை" என்றும், இசையமைப்பாளர் மெல்லிசை மன்னர் எம்.எஸ். விஸ்வநாதன் அவர்கள் வசித்து வந்த டிமாண்டி சாலைக்கு "எம்.எஸ். விஸ்வநாதன் சாலை" என்றும் புதிய பெயர் சூட்டப்பட்ட சாலைகளின் பெயர் பலகைகளை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.**




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.2.2026) தலைமைச் செயலகத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில், இசையமைப்பாளர் மெல்லிசை மன்னர் எம்.எஸ். விஸ்வநாதன் அவர்கள் வசித்து வந்த டிமாண்டி சாலைக்கு "எம்.எஸ்.விஸ்வநாதன் சாலை" என்று புதிய பெயர் சூட்டப்பட்ட சாலையின் பெயர் பலகையினை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். நிகழ்ச்சியில், அமைச்சர் கே.என்.நேரு, மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் த. வேலு, துணை மேயர் மு.மகேஷ் குமார், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் எம்.எஸ். விஸ்வநாதன் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

### திருச்சி லோகநாதன் தெரு!

தமிழ்த் திரைப்பட உலகத்தின் பழம்பெரும் பின்னணி பாடகரும், ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்து பல மேடை நிகழ்ச்சிகளில் பாடி அடக்குமுறைக்கு ஆளான தேசபக்தரும், பேரறிஞர் அண்ணா,



முத்தமிழறிஞர் கலைஞர், கலைவாணர் என்.எஸ்.கே. ஆகியோருடன் நெருக்கமான நட்பு கொண்டவரும், தமிழ்நாடு அரசின் கலைமாமணி விருதும், பேரறிஞர் அண்ணா அவர்களால் இசைத்தென்றல் பட்டமும் பெற்றவரும், இரண்டு ஆயிரத்திற்கும் மேற்பட்ட திரைப்பாடல்களை பாடியவருமான திருச்சி லோகநாதன் அவர்களின் கலைச் சேவையை சிறப்பிக்கும் வகையில் அவர் வசித்து வந்த மந்தைவெளிப்பாக்கம் நார்ட்டன் 3வது தெருவிற்கு "திருச்சி லோகநாதன் தெரு" என்று பெயர் சூட்டப்பட்டு, முதலமைச்சர் அவர்களால் பெயர் பலகை திறந்து வைக்கப்பட்டது.

### சீர்காழி கோவிந்தராஜன் சாலை!



தமிழ் மரபு இசை மற்றும் திரை இசை தழைத்தெழச் செய்த முன்னோடிகளில் ஒருவரும், சிறந்த வெண்கலக்குரல் வளமிக்க தமிழ்ப் பாடகர் சங்கீத சேவகர் பத்மஸ்ரீ சீர்காழி கோவிந்தராஜன் அவர்களின் நினைவாக அவர் வசித்த மந்தைவெளிப்பாக்கம் கிழக்கு வட்டச் சாலைக்கு "சீர்காழி கோவிந்தராஜன் சாலை" என்று பெயர் சூட்டப்பட்டு, முதலமைச்சர் அவர்களால் பெயர் பலகை திறந்து வைக்கப்பட்டது.

### எம்.எஸ். விஸ்வநாதன் சாலை!



கடந்த 70 ஆண்டுகளாக தென்னிந்திய மக்களைக் குறிப்பாகத் தமிழ் மக்களை தனது இன்னிசையால், மெல்லிசையால் மகிழ்வித்து, தமிழ் மக்களின் நினைவில் நீங்கா இடம் பெற்றவரும், நம் தாய் மொழியாம் தமிழ் மொழிக்கு அணி செய்யும் விதமாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் விருப்பத்தின் பேரில் தமிழ்த்தாய் வாழ்த்திற்கு இசையமைத்து,

1970லிருந்து இன்றும் அரசு மற்றும் கல்வி சாலைகளில் தமிழ்த்தாய் வாழ்த்தினை முழுங்க செய்தவரும், ஆறு முதல்வர்களுடன் பணிபுரிந்த பெருமைக்குரியவருமான மெல்லிசை மன்னர் எம்.எஸ். விஸ்வநாதன் அவர்களை சிறப்பிக்கும் வகையில் அவர் வசித்து வந்த டிமாண்டி சாலைக்கு "எம்.எஸ்.விஸ்வநாதன் சாலை" என்று பெயர் சூட்டப்பட்டு, முதலமைச்சர் அவர்களால் பெயர் பலகை திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் த. வேலு, துணை மேயர் மு. மகேஷ் குமார், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், மத்திய வட்டார துணை ஆணையர் எச்.ஆர்.கௌஷிக், அரசு உயர் அலுவலர்கள், திருச்சி லோகநாதன், சீர்காழி கோவிந்தராஜன், எம்.எஸ்.விஸ்வநாதன் ஆகியோரது குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

---

# தேர்தல் கூட்டணி – தலையங்கத்தில் 'தி இந்து' நாளேடு கருத்து!

**சென்னை, பிப். 19–**

**'தி இந்து' நாளேட்டில் (18.02.2026) வெளியான தலையங்கம் வருமாறு:–**

இந்தியா முழுவதும் பா.ஜ.க.வுக்கு எதிரான எதிர்ப்பு துண்டு துண்டாக அல்லது பலவீனமாகிவிட்ட நிலையில், தமிழ்நாட்டில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி மிகவும் வலுவான (பல கட்சி பா.ஜ.க. எதிர்ப்பு) கூட்டணியாக உள்ளது, இதற்குக் காரணம் தனித்துவமான சமூகஅரசியல் நெறிமுறைகளைக் கொண்ட ஒரு மாநிலத்தில் அதன் சித்தாந்த ஒற்றுமை மற்றும் அதன் தொகுதிக் கட்சிகள் கூட்டணிக் கட்சிகளுக்கு வாக்குகளை மாற்றுவதில் தடையற்ற திறன் ஆகியவை ஆகும்.

இருப்பினும், சமீபத்திய முன்னேற்றங்கள், காங்கிரஸ் இரண்டாம் கட்ட தலைவர்கள் சிலர் தி.மு.க. வை விமர்சித்துள்ளனர் அல்லது அதிகாரத்தில் நேரடிப் பங்கைக் கோரியுள்ளனர், இது கூட்டணியின் எல்லையை ஆபத்தான முறையில் நீட்டித்துள்ளது, இது கட்சிகளுக்கு இடையேயான மோதலின் விளிம் பிற்கு கொண்டு வந்துள்ளது. மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் கூட்டாளிகளுக்கு இடையிலான ஏற்பாடு ஒரு தசாப்தத்திற்கும் மேலாக தெளிவாக உள்ளது - தி.மு.க. அவர்களின் ஆதரவுடன் அரசாங்கத்தை கட்டமைக்கிறது, மேலும் கூட்டணி வாக்கு பரிமாற்றங்கள் மூலம் ஒன்றிய, மாநில மற்றும் உள்ளூர் மட்டங்களில் பிரதிநிதித்து வத்தின் அடிப்படையில் கூட்டாக பயனடைகிறது.

இந்த ஏற்பாடு 2024 பொதுத் தேர்தலில் தமிழ்நாட்டிலிருந்து காங்கிரஸ் கட்சிக்கு



No gain in bargaining

The Congress, not the DMK, stands to lose more if it frays the alliance

At a time when the opposition to the BJP has become fragmented or weakened across India, the DMK-led Secular Progressive Alliance (SPA) in Tamil Nadu remains the most robust multi-party anti-BJP alliance, largely because of its ideological cohesion in a State with a distinct socio-political ethos and the seamless ability of its constituent parties to transfer votes to allies. Yet, recent developments, where second-rung Congress leaders have either critiqued the DMK or demanded a direct share in power, have stretched the seams of the alliance dangerously to the brink of a fallout between the parties. The arrangement between the SPA's partners has been clear for over a decade – the DMK forms the government with their support, and the alliance benefits collectively in terms of representation at the Centre, State and local levels through vote transfers. This arrangement helped the Congress reap a good harvest of MPs from Tamil Nadu in the 2024 general election. So why have MP Manickam Tagore and All India Professionals' Congress president Praveen Chakravarty begun criticising the DMK, even after the high command asked them not to air such views publicly?

சிறந்த எம்.பி.க் களை உருவாக்க உதவியது. அப்படியானால், மேலிடம் இதுபோன்ற கருத்துக்களைப் பகிரங்கமாக வெளியிட வேண்டாம் என்று கேட்டுக் கொண்ட பிறகும், எம்.பி. மாணிக்கம் தாகூரும், அகில இந்திய வல்லுநர் காங்கிரஸ் தலைவர் பிரவீன் சக்ரவர்த்தியும் ஏன் தி.மு.க.வை விமர்சிக்கத் தொடங்கியுள்ளனர்?

அதிகாரத்தில் பங்கு கோருவது என்பது அதிக சட்டமன்ற இடங்களில் போட்டியிடுவதற்கான ஒரு பேரம் பேசும் தந்திரமாகக் கருதப்படலாம். ஆனால் காங்கிரஸ் 2016 உடன் ஒப்பிடும்போது 41 இல் எட்டு 2021 இல் 25 இடங்களில் 18 என விகிதத்தைப் பெற்றது, இது அதன் ஆதரவுத் தளத்துடன் ஒப்பிடும்போது இந்த வரம்பு நியாயமானது என்பதைக் குறிக்கிறது.

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகள் ஒன்றாக வரைவு செய்யப்பட்ட பொதுவான குறைந்தபட்ச வேலைத் திட்டத்தின் அடிப்படையில் போட்டியிட்டாலோ அல்லது காங்கிரஸ் மாநிலத்தில் அதன் ஆதரவுத் தளத்தை கணிசமாக அதிகரித்திருந்தாலோ, அதற்கு ஏற்ப இணக்கம் ஏற்பட்டாலோ மட்டுமே அதிகாரப் பகிர்வு சாத்தியமானதாக இருக்கும்.

தொழிலாளர் மற்றும் சாதி பாகுபாடு பிரச்சினைகளுக்கு தி.மு.க. தலைமையிலான அரசாங்கத்தை பொறுப்பேற்கச் செய்யும் வி.சி.க. அல்லது இடதுசாரிகளைப் போலல்லாமல், காங்கிரசின் விமர்சனங்கள் சந்தர்ப்பவாதமாகவும், தற்காலிகமாகவும் இருந்தன, நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் ஒரு எதிர்க்கட்சி சக்தியாக உருவெடுத்த பின்னரே அவை வெளிப்பட்டன.

காங்கிரஸ் கட்சி, த.வெ.க. கட்சியுடன் கூட்டணி அமைத்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளை கைவிட்டால், 2024ல் அந்த கூட்டணிக்கு அதிக இடங்களை பெற்றுத் தந்த இந்தியாவின் முக்கிய கூட்டாளியான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியை தியாகம் செய்து, மிகப்பெரிய இழப்பை சந்திக்க நேரிடும். மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் இருந்து காங்கிரஸ் கட்சி வெளியேறுவது, தி.மு.க.வுக்கும் அ.தி.மு.க.வுக்கும் (பா.ஜ.க.வுடன் கூட்டணி) இடையிலான இடைவெளியைக் குறைப்பதன் மூலம் போட்டியை இறுக்கமாக்கும். ஆனால், பா.ஜ.க.வை எதிர்க்கும் பல பாரம்பரிய காங்கிரஸ் வாக்காளர்கள், த.வெ.க. போன்ற இதுவரை போட்டியிடாத மற்றும் புதிரான சக்தியுடன் கூட்டணி சேருவதற்குப் பதிலாக, தி.மு.க. தலைமையிலான கூட்டணியை நோக்கி ஈர்க்கப்படுவார்கள்.

இது முட்டாள்தனமான செயலாகும், காங்கிரஸ் தலைமை தமிழ்நாட்டில் ஆட்டம் காணாமல் கூட்டணி ஒற்றுமையில் கவனம் செலுத்தி, அதன் பலவீனமான அமைப்பை மீண்டும் உயிர்ப்பிப்பதில் சிறப்பாகச் செயல்பட வேண்டும்.

இவ்வாறு 'தி இந்து' நாளேட்டின் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், அம்பத்தூர் வடக்குப் பகுதியில், மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு மாபெரும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நேற்று மாவட்ட மருத்துவரணி அமைப்பாளர் டாக்டர்.ஜி.சாந்தகுமாரி எம்.சி தலைமையில், அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் 300 பள்ளி கல்லூரி மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை மற்றும் உபகரணங்களை அமைச்சர் கோவி. செழியன், கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் செல்வி.திவ்யா சத்யராஜ் ஆகியோர் வழங்கி சிறப்பித்தனர். இவ்விழாவில் அம்பத்தூர் வடக்கு பகுதி செயலாளர் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, பி.கே.மூர்த்தி எம்.சி, அம்பத்தூர் தெற்கு பகுதி கழக செயலாளர் டி.எஸ்.பி.இராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர்.நாகராஜ், வி.ரமேஷ்(எ) நீலகண்டன் எம்.சி, எல்.பி.எப்.மோகன், டாக்டர்.ஏ.பி.பூர்ணிமா எம்.சி, உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

## கேள்விக் கென்ன பதில் ?

**கேள்வி :**

**"வெளியே அழகாக இருக்கும், உள்ளே சொத்தையாக இருக்கும் தி.மு.க.வின் பட்ஜெட், அத்திப் பழம் போல உள்ளது" என்று எடப்பாடி பழனிசாமி கூறியிருக்கிறாரே ?**

**பதில்:**

அத்திப் பழத்தைப் பற்றி எடப்பாடி கூறியிருப்பது ஆதிகாலக் கருத்து.

அத்திப்பழத்தில், நார்ச்சத்து, பொட்டாஷியம், கால்சியம் மற்றும் ஆன்ட்டி ஆக்ஸிடென்ட்டுகள் நிறைந்து,சத்து மிகுந்த பழம் என்பது இன்றைய விஞ்ஞானக் கருத்து.

அத்திப்பழம், இதய ஆரோக்கியம், இரத்த அழுத்தம், எலும்பு ஆரோக்கியம் ஆகியவற்றுக்கு உன்னதமானது.

மேலும் எடை மேலாண்மை, மலச் சிக்கல் நிவாரணம், ஒட்டு மொத்த ஆரோக்கியத்திற்கு சிறந்தது அத்திப்பழம் !

தமிழ்நாடு பட்ஜெட் , அத்திப்பழம் போன்றது என்று முழுமையாக அறியாமலேயே சொன்னதிலிருந்து, அதன் சிறப்புகளை எடப்பாடி ஏற்கிறார் என்றுதான் கொள்ள வேண்டும்.

எனினும் அவர் தன்னை நவீனப் படுத்திக் கொள்வது நன்று !